**ஜனவரி – 15**

# தமிழ்நாடு செய்திகள்

## சமூக நீதி விருதுகள்

- திராவிட இயக்கத்தைப் பற்றி ஆவணப்படுத்திய வரலாற்றாசிரியர் K.திருநாவுக்கரசு மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி K.சந்துரு ஆகியோருக்கு முறையே 2021 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது மற்றும் டாக்டர் அம்பேத்கர் விருது ஆகிய விருதுகள் வழங்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது.
- திரு. திருநாவுக்கரசு அவர்களின் படைப்பான நீதிக் கட்சி வரலாறு என்ற புத்தகமானது 1916 ஆம் ஆண்டில் நீதிக் கட்சி நிறுவப்பட்டது முதல் 1944 ஆம் ஆண்டில் திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட்டது வரையில் அதன் வரலாற்றை இரண்டு தொகுதிகளாக ஆவணப்படுத்துகிறது.
- இவரது படைப்புகளான திராவிட இயக்க வேர்கள் மற்றும் திராவிட இயக்க தூண்கள் ஆகியவற்றிற்காகவும் இவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
- இவர் திராவிட இயக்கத்தின் நடமாடும் கலைக்களஞ்சியம் (mobile encyclopedia) என்று அன்புடன் அழைக்கப்படுகிறார்.
- திரு. சந்துரு தனது பணிக் காலத்தின் போது 96,000 வழக்குகளில் தீர்ப்புகளை வழங்கி உள்ளார்.
- சமூக நீதிக்காக வேண்டி சிறந்தப் பங்களிப்பினை ஆற்றுபவர்களுக்கு தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் தந்தை பெரியார் விருதினை வழங்கி கௌரவித்து வருகிறது.
- ஆதி திராவிடர் சமூகத்தின் சமூக-பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றிய சிறந்த நபருக்கு அம்பேத்கர் விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த ஆண்டின் விருதுகளுக்கான ரொக்கத் தொகையை ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



## கலைஞர் நினைவு நூலகம்

- மதுரையில் நிறுவப்பட உள்ள கலைஞர் நினைவு நூலகத்திற்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- இது சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை ஒத்தது

போன்று கட்டமைக்கப்பட உள்ளது.




## சர்வதேச திருக்குறள் மாநாடு 2022

- தமிழக ஆளுநர் R.N. ரவி 2022 ஆம் ஆண்டு சர்வதேச திருக்குறள் மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த மாநாடு கோவையில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.
- ஸ்ரீ கிருஷ்ணா நிறுவனங்கள் மற்றும் குறள் மாலை சங்கம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.




## வினிஷா உமாசங்கர்

- 16வது அதிகாரப் பூர்வ குயின்ஸ் பேட்டன் ரிலே என்ற ஒரு நிகழ்வில் இந்திய அணியின் சார்பாக, வினிஷா பேட்டன் (தண்டத்தை) என்பதினைத் தாங்கி சென்றார்.
- இந்த நிகழ்வு 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 07 அன்று லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் தொடங்கியது.
- இது 294 நாட்களில் 72 காமன்வெல்த் நாடுகள் மற்றும் ஆட்சிப் பிரதேசங்களை கடந்து, 2022 ஆம் ஆண்டு ஜூலை 28 அன்று நடைபெற உள்ள 2022 ஆம் ஆண்டு பர்மிங்காம்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் முடிவடைய உள்ளது.

- 2022 காமன்வெல்த் போட்டிகள் இங்கிலாந்தின் பர்மிங்காம் நகரில் நடைபெற உள்ளது.
- இதற்காக வேண்டி ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள பர்மிங்காம் நகரத்தினை நோக்கிச் செல்லும் பாதையில் இந்தியா 27வது நாடாக உள்ளது.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற ரவி தாஹியா, டெல்லியில் நடந்த குயின்ஸ் பேட்டன் ரிலேயில் ஒரு மாதிரி ஓட்டம் மூலம் இதனைத் துவக்கி வைத்தார்.
- குயின்ஸ் பேட்டன் ரிலே போட்டியானது ஜனவரி 14 ஆம் தேதியன்று பெங்களூருவிலும், ஜனவரி 15 ஆம் தேதியன்று புவனேஸ்வரிலும் நடைபெற்றது.
- நீராவி சலவைப் பெட்டிக்கு ஆற்றல் வழங்குவதற்காக வேண்டி சூரிய சக்தியைப் பயன்படுத்தும் வகையில் தனது நடமாடும் சூரிய சக்தி சலவை வண்டியைக் கண்டுபிடித்ததன் மூலம் வினிஷா உலகை ஆச்சரியப் படுத்தினார்.
- இவர் தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- இவர் தனது கண்டுபிடிப்பிற்காக தேசியப் புத்தாக்க அறக்கட்டளை இந்தியா என்ற அமைப்பினால் நிறுவப்பட்ட டாக்டர். A.P.J. அப்துல் கலாம் IGNITE விருதினை வென்றார்.
- தேசியப் புத்தாக்க அறக்கட்டளை என்பது மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.




## குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழில்நுட்ப மையம்

- புதுச்சேரியில் நிறுவப்பட்டுள்ள, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழில் நுட்ப மையத்தினை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.
- இது மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் கீழ் செயல்படும்.

- புதுச்சேரியில் நடைபெற்ற 25வது தேசிய இளைஞர் விழா (2022 ஆம் ஆண்டு ஜனவரி 12 மற்றும் 13 ஆம் தேதி) கொண்டாட்டத்தின் தொடக்க நிகழ்வின் போது இது திறந்து வைக்கப் பட்டது.




### தேசிய இளைஞர் விழா





- சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளை முன்னிட்டு, 25வது தேசிய இளைஞர் விழாவை நடத்துவதற்கான இடமாக புதுச்சேரியை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தேர்வு செய்துள்ளார்.
- புதுச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள 'பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம்' எனப் படும் திறந்தவெளி அரங்கத்துடன் கூடிய ஒரு நவீன அரங்கத்தினையும் அவர் திறந்து வைத்தார்.
- தேசிய இளைஞர் விழாவானது 1995 ஆம் ஆண்டில் தேசிய ஒருங்கிணைப்பு முகாமினால் நடத்தப்பட்ட நிகழ்வின் கீழ் ஒரு மாபெரும் நிகழ்ச்சியாக தொடங்கப் பட்டது.
- இது மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம்

மற்றும் மாநில அரசுகளுள் ஒன்றின் உதவி ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## தேர்தல் நடத்தை விதிமுறைகள்

- 5 மாநிலங்களுக்கான தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரசுகள், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் ஜனவரி 8 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளன.
- தேர்தல் விதிகளின் அனைத்து விதிமுறைகளும் கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தர காண்ட் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முழுவதும் பொருந்தும்.
- தேர்தல் நடத்தை விதிமுறைகள் என்பது தேர்தல் ஆணையத்தினால் வழங்கப்படும் வழிகாட்டுதல்களின் ஒரு தொகுப்பாகும்.
- தேர்தல் முடிந்து முடிவுகள் அறிவிக்கப்படும் வரையில் இந்த விதிமுறைகள் அமலில் இருக்கும்.




## இஸ்ரோவின் புதிய தலைவர்




- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (இஸ்ரோ) டாக்டர்.S. சோமநாத் அவர்களை அதன் புதிய தலைவர் மற்றும் விண்வெளிச் செயலாளராக நியமிப்பதாக அறிவித்துள்ளது.
- தற்போது இவர் கேரளாவின் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் (VSSC - Vikram Sarabhai Space Centre) இயக்குநராக உள்ளார்.
- இவர் அடுத்த 3 ஆண்டுகளுக்கு இஸ்ரோவின் இயக்குநராக செயல்பட உள்ளார்.

- இவர் கைலாசவடிவு சிவன் அவர்களின் நீட்டிக்கப்பட்ட ஒரு பதவிக் காலம் நிறைவு அடைந்ததைத் தொடர்ந்து இந்தப் பொறுப்பினை ஏற்க உள்ளார்.
- இஸ்ரோவின் தலைவர் பொறுப்பு, விண்வெளிச் செயலாளர் மற்றும் விண்வெளி ஆணையத்தின் தலைவர் ஆகிய பதவிகளை பொதுவாக ஒருவர் மட்டுமே வகிப்பார்.
- இஸ்ரோவின் தலைவர் இந்திய அரசின் செயலாளராக செயல்படுகிறார்.
- இவர் விண்வெளி துறையின் நிர்வாகியும் ஆவார்.
- இந்தத் துறையானது நேரடியாக பிரதமர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்.

## கங்கா சாகர் மேளா 2022

- கங்கா சாகர் மேளா என்பது கிழக்கு இந்தியாவில் நடைபெறும் மிகப்பெரிய திருவிழா ஆகும்.
- இது இந்தியாவில் நடைபெறும் கும்பமேளாவிற்கு அடுத்தப் படியாக இந்தியாவின் இரண்டாவது பெரிய திருவிழாவாகும்.
- இது மேற்கு வங்காளத்தின் சாகர் தீவில் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 12 அன்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியால் தொடங்கி வைக்கப்பட்டது.




## கச்சாய் எலுமிச்சை திருவிழா




- இரண்டு நாட்கள் அளவிலான 18வது கச்சாய் எலுமிச்சை திருவிழா மணிப்பூரில் உள்ள உக்ருல் மாவட்டத்தில் உள்ள கச்சாய் கிராமத்தில் தொடங்கியது.
- 'பாதுகாப்பான சுற்றுச்சூழல் மற்றும் கிராமப்புற மாற்றத்திற்கான இயற்கை கச்சாய் எலுமிச்சை' என்ற ஒரு கருத்துருவின் கீழ் இந்த ஆண்டின் திருவிழா நடத்தப்படுகிறது.

- மணிப்பூரின் கச்சாய் எலுமிச்சைக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

## லட்சத்தீவில் தடுப்பூசி வழங்கீடு

- லட்சத்தீவு அரசு ஆனது 15 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட தகுதிவாய்ந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் தடுப்பூசி வழங்கியுள்ளது.
- இதன் மூலம், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்கள் என்ற பிரிவில் இந்தச் சாதனையை எட்டிய முதல் அரசாங்கம் என்ற பெருமையை லட்சத்தீவு பெற்றுள்ளது
- முன்னதாக, சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் போன்ற பிற பிரிவினர்கள் அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கிய ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்கள் பிரிவில் முதலாவதாக லட்சத்தீவு இடம் பெற்றுள்ளது.

## 5வது சீக்கிய தக்த்

- 1971 ஆம் ஆண்டு டெல்லி சீக்கிய குருத்வாரா சட்டத்திற்கான ஒரு திருத்த மசோதாவை டெல்லி சட்டசபை நிறைவேற்றியது.
- பஞ்சாபின் பதிண்டா பகுதியில் உள்ள "தக்த் தம்தாமா சாஹிப்பை" சீக்கியர்களின் ஐந்தாவது தக்த் ஆக இந்த மசோதா அங்கீகரிக்கிறது.
- தக்த் (சிம்மாசனம்) என்பது சீக்கியர்களுக்கான தற்காலிக ஒரு அதிகார பீடமாகும்.
- தற்போது, ஐந்து சீக்கிய தக்த்கள் உள்ளன.
- அவற்றுள் மூன்று பஞ்சாபிலும், ஒன்று மகாராஷ்டிராவிலும், ஒன்று பீகாரிலும் உள்ளன.
- அமிர்தசரஸில் அமைந்துள்ள அகல் தக்த் என்பது  தக்த்களில் மிகவும் பழமையானது ஆகும்.
- இது 1606 ஆம் ஆண்டில், ஆறாவது குருவான குரு ஹர்கோவிந்த் அவர்களால் நிறுவப் பட்டது.





## சோஜிலா கணவாய்

- எல்லைச் சாலைகள் அமைப்பானது  சோஜிலா கணவாயில் முதல் முறையாக ஜனவரி மாதத்தில் போக்குவரத்தினை மேற்கொள்வதற்கு  அனுமதித்துள்ளது.
- இது இந்தியாவின் லடாக் ஒன்றியப் பிரதேசப் பகுதியில் உள்ள  இமயமலையின் ஒரு

உயரமான மலைப் பாதையாகும்.

- ஸ்ரீநகர்-சோனாமார்க்-கும்ரி சாலையில் 11643 அடி உயரத்தில் அமைந்துள்ள சோஜிலா கணவாய் ஆனது, காஷ்மீர் பள்ளத்தாக்கிற்கும் லடாக்கிற்கும் இடையே உள்ள ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பாதையாகும்.
- இமயமலைத் தொடரின் மேற்குப் பகுதியில் உள்ள ஸ்ரீநகர் மற்றும் லே ஆகியவற்றுக்கு இடையேயான இந்தக் கணவாய் வழியாக தேசிய நெடுஞ்சாலை 01 ஆனது செல்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் மிக வயதான தேனுண்ணுங்கரடி




- வன் விஹார் தேசியப் பூங்கா மற்றும் உயிரியல் பூங்காவில் உள்ள இந்தியாவின் மிக வயதான பெண் தேனுண்ணுங்கரடியானது உயிரிழந்தது.
- இந்தப் பூங்காவானது மத்தியப் பிரதேச மாநிலத்தின் போபால் நகரில் அமைந்து உள்ளது.

- 40 வயதான இந்த கரடியின் பெயர் குலாபோ ஆகும்.
- இவை இந்தியத் துணைக் கண்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட மிர்மெகோபாகஸ் (myrmecophagous) என்ற ஒரு கரடி இனத்தைச் சேர்ந்தவையாகும்.
- வாழ்விடச் சீரழிவு மற்றும் வாழ்விட இழப்பு ஆகியவற்றின் காரணமாக, இவை IUCN சிவப்புப் பட்டியலில் பாதிக்கப்படக் கூடிய இனங்கள் பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ளன.
- நீண்ட கீழ் உதடு மற்றும் அண்ணத்தைக் கொண்டுள்ளதால் இவை "லேபியேடட் பியர்" (labiated bear) என்றும் அழைக்கப்படுகிறன..
- உலகளவில் இந்தியா, பூடான் மற்றும் இலங்கையின் மிதவெப்பப் பருவநிலை மண்டலங்கள் மற்றும் நேபாளத்தின் தராய் பகுதி ஆகியவற்றில் இவை பரவலாக காணப் படுகின்றன.

## இந்திய வன அறிக்கை – 2021

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர், பூபேந்தர் யாதவ், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் ‘இந்திய வன அறிக்கையின் (2021)’ 17வது பதிப்பினை வெளியிட்டார்.
- இது நாட்டின் வன வளங்களை மதிப்பிடுவதற்காக 1987 ஆம் ஆண்டு முதல் இந்திய வன ஆய்வு அமைப்பினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது.
- 2019 ஆம் ஆண்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் வனங்கள் மற்றும் மரங்களின் பரவலானது 2,261 சதுர கிலோமீட்டர்கள் அதிகரித்து உள்ளது.
- வனப் பரவலில் 1,540 சதுர கிலோ மீட்டர் உயர்வும் மரங்களின் பரவலில் 721 சதுர கிலோ மீட்டர் உயர்வும் இதில் உள்ளடங்கும்.
- நாட்டின் மொத்த வனங்கள் மற்றும் மரங்களின் பரவலானது தற்போது 80.9 மில்லியன் ஹெக்டேர் ஆக அல்லது நாட்டின் புவியியல் பரப்பில் 24.62% ஆக உள்ளது.
- 17 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களின் புவியியல் பரப்பில் 33 சதவீதத்திற்கு மேலான பகுதிகள் வனப்பகுதிகளாக உள்ளன.
- இவற்றுள் லட்சத்தீவு, மிசோரம், அந்தமான் & நிக்கோபார் தீவுகள், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மேகாலயா ஆகியவை 75 சதவீதத்திற்கும் அதிகமான வனப் பரவலைக் கொண்டுள்ளன.
- வனப்பரவல் அதிகரிப்பில் முன்னணியில் உள்ள முதல் ஐந்து மாநிலங்கள் ஆந்திரப் பிரதேசம் (647 சதுர கி.மீ.), தெலுங்கானா (632 சதுர கி.மீ.), ஒடிசா (537 சதுர கி.மீ.), கர்நாடகா (155 சதுர கி.மீ.) மற்றும் ஜார்க்கண்ட் (110 சதுர கி.மீ.) ஆகியன ஆகும்.
- பரப்பளவு வாரியாக, மத்தியப் பிரதேசம் ஆனது நாட்டிலேயே அதிக வனப்பரவலைக் கொண்டுள்ளது.
- அதனைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை உள்ளன.
- மொத்த புவிப் பரப்பளவில் வனப்பரவல் சதவீதத்தின் அடிப்படையில் முன்னணியில் உள்ள முதல் ஐந்து மாநிலங்கள் மிசோரம் (84.53%), அருணாச்சலப் பிரதேசம் (79.33%), மேகாலயா (76.00%), மணிப்பூர் (74.34%) மற்றும் நாகாலாந்து (73.90%) ஆகியவை ஆகும்.
- நாட்டில் உள்ள சதுப்பு நிலப் பரப்பில் 17 சதுர கிலோமீட்டர் அதிகரித்துள்ளது.
- சதுப்பு நிலப் பரப்பின் அதிகரிப்பு அடிப்படையில் முன்னணியில் உள்ள முதல் மூன்று மாநிலங்கள் முறையே ஒடிசா (8 சதுர கி.மீ.), மகாராஷ்டிரா (4 சதுர கி.மீ.) மற்றும் கர்நாடகா (3 சதுர கி.மீ.) ஆகியவை ஆகும்.

- நாட்டிலுள்ள பெரும் நகரங்களில், வனப்பரவல் அடிப்படையில் அகமதாபாத் நகரம் ஒரு மிகப்பெரிய இழப்பைச் சந்தித்துள்ளது.
- வடகிழக்கு மாநிலங்களானது 1,020 சதுர கி.மீ. அளவிலான இழப்பைச் சந்தித்துள்ளது.
- இது ஒட்டு மொத்தமாக இந்தியாவின் மொத்த வனப்பரவலில் 23.75 சதவீதத்தை உள்ளடக்கியதோடு இந்தியாவின் மிகப்பெரிய பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளுக்கு உட்பட்டவையாகவும் உள்ளது.
- அருணாச்சலப் பிரதேசம் அதிகபட்சமாக 257 சதுர கி.மீ இழப்பினையும், அதனைத் தொடர்ந்து மணிப்பூர் 249 சதுர கி.மீ இழப்பினையும், நாகாலாந்து 235 சதுர கி.மீ இழப்பினையும், மிசோரம் 186 சதுர கி.மீ இழப்பினையும் மேகாலயா 73 சதுர கி.மீ. இழப்பினையும் கண்டுள்ளன.
- நாட்டில் மொத்தமுள்ள 140 மலைப்பாங்கான மாவட்டங்களில், கடந்த இரண்டு ஆண்டுகளில் காடுகளின் பரப்பளவு 902 சதுர கிலோ மீட்டர் அளவு குறைந்துள்ளது.




# முக்கிய தினங்கள்

## ஆயுதப்படை வீரர்கள் தினம் - ஜனவரி 14




- இந்தத் தினமானது 2017 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 14 அன்று அனுசரிக்கப் படுகிறது.
- தேசத்திற்கான சேவையில் நமது படை வீரர்கள் ஆற்றும் தன்னலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தை அங்கீகரித்து அதனைக் கௌரவிப்பதே இந்தத் தினத்தின் ஒரு நோக்கமாகும்.

- ஃபீல்ட் மார்ஷல் K.M. கரியப்பா (KM Cariappa) நாட்டிற்கு ஆற்றியச் சேவைகளுக்கு மரியாதை வழங்கும் விதமாகவும் அவரை நினைவு கூறும் வகையிலும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இவர் 1953 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று ஓய்வு பெற்ற இந்திய ஆயுதப் படைகளின் முதல் இந்தியத் தலைமைத் தளபதி ஆவார்.

## உலக தர்க்க தினம் - ஜனவரி 14




- இது தத்துவம் மற்றும் மனித அறிவியலுக்கான சர்வதேச சபையுடன் (CIPSH) இணைந்து யுனெஸ்கோ அமைப்பினால் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அறிவிக்கப் பட்ட சர்வதேச தினமாகும்.
- இது இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான தர்க்கவாதிகளில் இருவரான கர்ட் கோடலின் இறந்த தேதி மற்றும் ஆல்ஃபிரட் டார்ஸ்கியின் பிறந்த தேதி ஆகியவற்றுடன் ஒத்திருக்கிறது.

## 74வது இந்திய ராணுவ தினம் - ஜனவரி 15

- இந்திய நாட்டையும் அதன் குடிமக்களையும் பாதுகாப்பதில் வீரமரணம் அடைந்த வீரர்களின் தியாகத்திற்கு வணக்கம் செலுத்தும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- பிரிட்டிஷ் ஜெனரல் பிரான்சிஸ் புச்சரிடமிருந்து பொறுப்பினைக் கைப்பற்றி இந்திய ராணுவத்தின் முதல் தலைமைத் தளபதியாக ஃபீல்ட் மார்ஷல் K.M. கரியப்பா பதவி ஏற்றதை நினைவு கூறும் விதமாகவும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- புச்சர் 1949 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் கடைசி பிரிட்டிஷ் ராணுவத் தளபதியாக இருந்தார்.
- தேசிய ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் உதவியுடன் புதிய ராணுவ போர்க்கள சீருடையானது உருவாக்கப்பட்டுள்ளது.
- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் உள்ள லோங்கேவாலா என்ற இடத்தில் உள்ள இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் ஒரு பிரம்மாண்ட நினைவுச் சின்ன தேசியக் கொடி பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.
- காதி துணியால் நெய்யப்பட்ட உலகின் மிகப்பெரிய தேசியக் கொடி இதுவாகும்.
- இந்த நினைவுச் சின்ன தேசியக் கொடியானது 225 அடி நீளமும், 150 அடி அகலமும், சுமார் 1,400 கிலோ எடையும் கொண்டதாகும்.

- 1971 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போரின் ஒரு மையப் பகுதியாக லோங்கேவாலா திகழ்ந்தது.
- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 02 அன்று லேவில் இந்த தேசியக் கொடி பறக்கவிடப் பட்டது முதல், தற்போது 5வது முறையாக இது பொது மக்கள் பார்வைக்கு பறக்க விடப் பட்டுள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★